# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2248/35 - 2021 ඔක්තෝබර් මස 06 වැනි බදාදා - 2021.10.06

*2248/35 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47 (1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020 ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு, 2021 ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2021, ஒற்றோபர் 04.

(1) அவ்வறிவித்தலில் இல.“ 6.1 நிதி மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் எனும் தலைப்பையும் அதன் கீழுள்ள “01. கடமைகளும் பணிகளும் 02. அதிவிசேட முன்னுரிமைகள் 03. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்” என்பவற்றை நீக்குவதன்தன்மூலம்;

(2) அவ்வறிவித்தலில் இல.“6.0 நிதி அமைச்சர்” எனும் தலைப்பின் கீழுள்ள “03. அதிவிசேட முன்னுரிமைகள் மற்றும் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்” தொடர்பில் பின்வருமாறு-

**03. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. அனைவருக்கும் நலன் கிடைக்கின்றதும் அனைத்து மாகாணங்கள் உள்ளடங்கும் வருமானம் முரண்பாடுகள் தணிக்கப்படுகின்றதுமான நிலைபேறான உயர்மட்ட பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சி வேகத்தை ஏற்படுத்திக்கொள்ளல்.

2. குறைந்த வருமானம் பெறுவோருக்கு முன்னுரிமை வழங்கி தொழிலின்மையைக் குறைத்துக் கொள்ளலும் தனிநபர் வருமானத்தை கூட்டிக் கொள்ளலும்

3. வருடாந்த சராசரி பணவீக்க வீதத்தை குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதன் மூலம் விலைகளின் நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல்

4. வரவுசெலவு பற்றாக்குறை மற்றும் அரச கடன்களைக் குறைத்துக்கொள்வதன் மூலம் அரச வருமானக் கொள்கைகளில் நிச்சயமின்மையைக் குறைத்தல்

5. கடன் வட்டிவீதங்களைக் குறைந்த மட்டத்தில் பேணுதலின் ஊடாக நிதி வள பொருளாதாரத் தேவைகளை விரிவாக்கல்

6. ரூபாவின் பெறுமதி நிலைப்பாடு உறுதியுறும் வகையில் நிதி மற்றும் கொடுப்பனவு ஐந்தொகைக் கொள்கைகளையும் வட்டி வீதத்தையும் திடமாக்கிக் கொள்ளுதல்.

7. உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தல், குறைந்த வருமானம் பெறுபவர்களை வலுப்படுத்தலும், முதலீட்டு ஊக்குவிப்புக்குத் தேவையான வழிகளை அறிமுகப்படுத்ததல்.

8. பொதுமக்களுக்குப் பயன்கிடைக்குமாறு தேசிய வியாபார சமூகத்துக்குத் தேவையான வர்த்தகச் சூழலை விரிவாக்கல்

9. அரச தொழில் முயற்சிகளைப் பலப்படுத்துதல்

10. அரச வருமானங்கள் மற்றும் செலவு முகாமையை வினைத்திறமைபடுத்துவதற்குத் தேவையான தாபனக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

11. சேமிப்பு மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் விதத்தில் வங்கிகள், நிதி நிறுவனங்களை வலுப்படுத்தும் சீர்திருத்தங்களை செயற்படுத்தல்

12. வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்கள், தொழில்கள் என்பவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிறுவனச் சீரமைப்பைச் செயற்படுத்துதல்.

13. விவசாயம், நிர்மாணத்துறை, தகவல் தொழில்நுட்பக் கைத்தொழில், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்கள், சுற்றுலா மற்றும் ஏற்றுமதி போன்ற பிரிவுகளை மேம்படுத்துவதற்காகத் தேசிய அபிவிருத்தி நிதி மற்றும் மூலதனச் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை கூட்டிணைத்து விரிவாக்குதல்.

14. அரச பிணைமுறி மூலம் பங்குச் சந்தையை கவரச்செய்தல்.

15. திறைசேரி உண்டியல் மற்றும் பிணைமுறி ஆரம்ப விற்பனைச் சந்தை மறுசீரமைப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் நடடிக்கைகளை வலுப்படுத்துதல்.

16. சர்வதேச தேசிய வர்த்தகப் பிரமுகர்களினது (International Business Giants) வர்த்தக நிறுவனங்களின் பிரதான அலுவலகங்களை கொழும்பு மற்றும் துறைமுக நகரத்தை அண்டிய பிரதேசத்தில் தாபிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

17. வெளிநாட்டு முதலீட்டாளர்களை இந்நாட்டுக்கு வரவழைத்துக் கொள்வதற்காக தனியார் பிரிவினதும் உதவியோடு சுபீட்சத்தின் நோக்கு புதிய பொருளாதார திட்டத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச பிரசார வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

18. பாரிய அளவிலான தேசிய முதலீட்டாளர்களுக்கு அதிதொழில்நுட்ப உற்பத்திகளைப் (High Technology products) புதிதாக ஆரம்பிப்பதற்குத் தேவையான சகல வசதிகளை வழங்குதல்.

19. தேசிய வர்த்தகர்களுக்கு போட்டிகரமாக வியாபாரத்துறைகளில் ஈடுபடக் கூடியதாக வெளிநாட்டு முதலீடுகளை ஒழுங்குறுத்தி உள்ளூர் வியாபாரிகளை பாதுகாத்து, வலுவூட்டுவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றைச் செயற்படுத்தல்

20. அரச தொழில் முயற்சிகள் பொருளாதாரம் மற்றும் சமூகரீதியில் தேசிய பொருளாதாரத்தில் செய்யப்படும் பங்களிப்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி அவற்றின் நிதிப்பலத்தை அதிகரித்தல்.

### 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| **1. பொதுத் திறைசேரி நடவடிக்கைகள்**<br><br>1. பொதுத் திறைசேரி<br>2. அரச நிதிக் கொள்கைகள் திணைக்களம்<br>3. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்<br>4. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்<br>5. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்<br>6. அரச நிதித் திணைக்களம்<br>7. திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம்<br>8. அரச நிதிக் கணக்குகள் திணைக்களம்<br>9. வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்<br>10. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்<br>11. நீதி அலுவல்கள் திணைக்களம்<br>12. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்<br>13. அபிவிருத்தி நிதித் திணைக்களம்<br>14. அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்<br>15. தேசிய நடவடிக்கை அறை<br><br>**2. அரச வருமான முகாமைத்துவ நடவடிக்கைகள்**<br><br>1. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்<br>2. இலங்கைச் சுங்கம்<br>3. மதுவரித் திணைக்களம்<br>4. தேசிய லொத்தர் சபை<br>5. அபிவிருத்தி லொத்தர் சபை<br>6. ஏற்றுமதி இறக்குமதித் திணைக்களம்<br><br>**3. வங்கி நிதிகள் மற்றும் மூலதனச் சந்தைக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை அலுவல்கள்**<br><br>1. இலங்கை மத்திய வங்கி<br>2. சகல அரச வங்கிகள், நிதி, காப்புறுதி மற்றும் அவற்றின் நிருவாகத்துக்குட்பட்ட கம்பனிகள் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள்<br>3. இலங்கைக் காப்புறுதிச் சபை<br>4. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இதன் நிருவாகக் கம்பனிகளும் இணைக்கம்பனிகளும்<br>5. கடன் தகவல் பணியகம் | • ஒதுக்கீட்டுச் சட்டங்கள்<br>• (1956 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சுங்கக் கட்டளைச் சட்டம்<br>• (1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) வெளிநாட்டுக் கடன் சட்டம்<br>• (2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) பற்றுக்கள் மீதான வரிச் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச்சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க)பொருளாதார சேவை அறவீட்டுச் சட்டம்<br>• 52ஆம் அத்தியாயமான மதுவரிக் கட்டளைச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க) நிதிக் குத்தகைச் சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க) நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம்<br>• (2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க) நிதி முகாமை (பொறுப்புடைமை) சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) உள்நாட்டு அரசிறைச் சட்டம்<br>• (2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க) காப்புறுதித் தொழில்துறை ஒழுங்கு படுத்துதல் சட்டம்<br>• (!951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) லோகோர் சீமாட்டி நிதியச் சட்டம்<br>• (1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்<br>• (2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) வியாபாரப் பெயர்ச் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) கம்பனிச் சட்டம்<br>• (1964 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வர்த்தக அடையாளச் சட்டம்<br>• (1935 ஆம் ஆண்டின் 61 இலக்க) சீட்டுக் கட்டளைச் சட்டம்<br>• (1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க)பொது ஒப்பந்தங்கள் சட்டம்<br>• (2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டம் |

**திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்**

6. கம்பனிப் பதிவாளர் திணைக்களம்
7. இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு
8. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
9. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
10. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

**4. நிதிய முகாமைத்துவம்**

1. லோகோர் சீமாட்டி நிதியம்
2. வேலைநிறுத்தங்கள், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்
3. தேசியக் காப்புறுதிப் பொறுப்பு நிதியம்
4. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்
5. சிரம வாசனா நிதியம்
6. தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்
7. சிறுநீரக நிதியம்
8. தேயிலை சக்தி நிதியம்
9. கப்புருக நிதியம்
10. அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்
11. வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்
12. உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்
13. புத்தாக்குநர் நிதியம்
14. துருசவிய நிதியம்

**5. ஒழித்துக்கட்டுவதற்கு அல்லது வேறு நிறுவனங்களுடன் இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்**

1. தொலைத்தொடர்புகள் திணைக்களம்
2. வனசீவராசிகள் நிதியம்
3. இலங்கை வெகுசன ஊடகப் பயிற்சி நிறுவனம்
4. உள்ளக வர்த்தகத் திணைக்களம்
5. தானியப் பயிர்ச்செய்கை மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி உற்பத்தி அதிகாரசபை
6. மட்டுப்படுத்தப்பட்ட ஜனத்தா பேர்ட்டிலைசர் என்டர்பிரைசஸ்
7. சிறுவர்களைப் பாதுகாப்போம் தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
8. கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்கள் உயிர்ப்பித்தல்(அகற்றுதல்) சட்டத்தின்கீழ் திறைசேரிச் செயலாளர் வசமாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

**நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்**

- (1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) முத்திரை தீர்வைச் சட்டம்
- (2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க) பெறுமதிசேர் வரிச் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க)நிதிச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க) சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சபைச் சட்டம்
- (1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர் சட்டம்
- (1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதி சட்டம்
- (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்
- (1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) மக்கள் வங்கிச் சட்டம்
- (1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வங்கிச் சட்டம்
- (1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) வங்கிகளினால் அளிக்கப்படும் கடன்களை அறவிடும் (விசேட ஏற்பாட்டுகள்) சட்டம்
- (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசியக் காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம்
- (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் சேமலாப நிதிச் சட்டம்
- உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) பதிவுசெய்யப்பட்ட பங்குமூல பிணையப்பத்திரங்கள் கட்டளைச்சட்டம்
- (2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கொடுப்பனவு மற்றும் நடுத்தீர்ப்பு முறைமைச் சட்டம்
- (2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க) நிதி வியாபார நிதியச் சட்டம்
- (2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்
- (1961 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம்

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| | • (1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) தேயிலை சக்தி நிதியச் சட்டம்<br>• (2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கப்ருக நிதியச் சட்டம்<br>• (1916ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க) உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியச் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) துருசவிய நிதியம்<br>• (1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டம்<br>• (1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கட்புலனற்றோர் புனரமைப்பு நிதியச்சட்டம்<br>• (1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) இலங்கை அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) கொடுப்பனவு முறைகள் மோசடிகள் சட்டம்<br>• (1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச்சட்டம்<br>• (2019 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு பயன்பாட்டு சொத்துக்கள் உயிர்ப்பித்தல் (அகற்றுதல்) சட்டம் |

(3) அவ்வறிவித்தலில் "6.2 சமுர்த்தி, உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்" எனும் தலைப்பு, "6.1 சமுர்த்தி, உள்ளகப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்" என மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

10-253

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.